THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# மாதிரி விடைகள்

# SUGGESTED SOLUTIONS

## KE5 – Commercial Insight for Management

.

**March 2015**

All Rights Reserved

# <u>பிரிவு 01</u>

## <u>வினா இல.1</u>

1.(a)

**1.1 பதில் - B**

இலாபமானது ஒரு வியாபார நிறுவனத்திற்கு அதன் வாடிக்கையாளருக்கு பொருட்கள் சேவைகளை வழங்கும் போது பெறுமதியை வழங்குவது இல்லை.

**1.2 பதில் - D**

கணக்கீட்டு இலாபம் = வருமானம் - வியாபாரத்தின் நேரடி செலவினம் (கிரயச் செலவு, ஊழியர் செலவு, தேய்மானம், etc.)

= 70,000 – (50,000 + 2,000) = ரூபா 18,000

பொருளியல் இலாபம் = வருமானம் - (வியாபரத்தின் நேரடி செலவினம் + உற்பத்திக் காரணிகளின் அமையச் செலவு)

= 70,000 – (52,000 + 10,000) = ரூபா 8,000

**1.3 பதில் : B**

நுகர்வோன் பகுத்தறிவுடன் செயற்படுவது என்பதன் விளக்கமானது அவனது வருமானத்தின் வரையறைக்குள் தனது மொத்தப் பயன்பாட்டை உச்சப்படுத்த முயற்சிப்பான்.

**1.4 பதில் : D**

சிலலுரிமை சந்தைக் கட்டமைப்பானது, சில பெரிய அளவிலான சந்தை வழங்குனர்களை உடையது. இவர்களிடையே நடத்தை உறவும் காணப்படும். இச்சந்தைக் கட்டமைப்பின் சிறப்பியல்பானது, இதன் நிறுவனங்கள் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. ஒரு நிறுவன வெளியீடுகளினதும் விலைகளினதும் நிலையானது தீர்மானிக்கப்படுவது அதன் போட்டியாளரின் நடவடிக்கைகள் மூலமாகும்.

**1.5 பதில் : A**

உட்புகுதல் என்பது சுற்றுப்பாய்விற்குள் வருமானத்தை செலுத்துதல் ஆகும். உட்புகுத்தல் சுற்றுப்பாய்விற்குள் வருமான அளவினை அதிகரிக்கும். உட்புகுத்தல் ஆனது, முதலீடு, அரச செலவினம், ஏற்றுபதி என்பனவாகும்.

**1.6 பதில் : D**

நிலையான நாணயமாற்று விகித முறையானது ஒரு நாட்டின் மத்திய வங்கியான அதன் நாணயமாற்று விகிதத்தை மற்றொரு நாட்டின் நாணயத்துடன் ஒப்பிடுதல் ஆகும். இதனால் நாணயமாற்று விகித நிச்சயமற்ற தன்மை நீங்கும்.

**1.7 பதில் : B**

பண நிரம்பலை அதிகரிக்கவும், வட்டி விகிதங்களை குறைக்கவும் மத்திய வங்கியானது, அரசு பிணைப் பத்திரங்களை கொள்வனவு செய்கின்றது. புதிதாக பணத்தினை பண நிரம்பலுக்கு உட்படுத்துவது பாரம்பரியமற்ற நாணயக் கொள்கை ஆகும்.

**1.8 பதில் : A**

ஆணை பிறப்பிப்பதற்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்குமான உரிமை ''அதிகாரம்'' எனப்படும்.

**1.9 பதில் : D**

குறைந்து செல்லும் எல்லை விளைவினையானது, ஒரு உற்பத்திக் காரணி (உ+ம் : ஊழியர் எண்ணிக்கை) ஆனது மாறும் போது, ஏனைய உற்பத்திக் காரணிகள் நிலையானதாக காணப்படும் போது, ஒரு அலகு வெளியீட்டின் மாறும் உற்பத்திக் காரணியானது வீழ்ச்சியடையும். இதனால் குறுகிய கால பயனை பொருளாதாரங்கள் அனுபவிக்கலாம்.

**1.10 பதில் : C**

இங்கு மாணவனது சந்தைப்படுத்தலின் தந்திரோபாயங்களின் அறிவு பரீட்சிக்கப்படுகின்றது.

**1.(b)**

1.11 பணம், மனித வளம், முறைமைகள், பொறி, நேரம், சந்தை, மூலப்பொருட்கள்.

1.12 குறிக்கோள் - எதிர்பார்க்கப்படும் முடிவுகளை அடைவதற்கான எண்ணம் குறிக்கோள். குறிக்கோளானது அளவிடக்கூடியது அல்லது ஒரு விசேட பண்பை எடுத்துக்காட்டுவதாக அமையும். குறிக்கோள் நீண்டகால தன்மையை உடையது அதன் அதற்கு நேரமும் திட்டமிடலும் அவசியம். நீண்டகால குறிக்கோள்களாவன பொதுவான அம்சங்களைக் கொண்டது.

உ+ம் :- வியாபாரத்தின் வருமானத்தை 2016ஆம் ஆண்டிறுதியில் இரண்டு மடங்காக அதிகரித்தல். 31.12.2015 ஆண்டில் வருடாந்த வருமானத்தை 10% ஆக அதிகரித்தல்.

1.13

- ❖ எப்பண்டத்தை உற்பத்தி செய்தல்
- ❖ எவ்வாறு உற்பத்தி செய்தல்
- ❖ யாருக்கு உற்பத்தி செய்தல்

1.14 நுண்பொருளியலானது, தனியான நுகர்வோனினதும், நிறுவனங்களினதும் செயற்பாடுகளின் இணக்கத்தினையும், கொள்வனவாளரினதும் விற்பனையாளரினதும் விருப்பத்தைத் தீர்மானிக்கும் காரணிகளை கொண்டதாகும். நுண்பொருளியலானது கேள்வி, நிரம்பல் ஆகியவற்றின் தன்மை, வெளியீடு மற்றும் அவற்றின் விலையை நிர்ணயித்தல் போன்றவற்றை ஒரு தனியான சந்தையில் நடைமுறைப்படுத்துவதாகும். மேலும், நுண்பொருளியலானது பொருளாதாரத்தின் சிறிய கூறுகள்மீது கவனத்தை செலுத்துதல் ஆகும். பொருளியலின் அடிப்படை விதிகளை பிரயோகித்து ஒவ்வொரு தனி வியாபார நிறுவனத்தின் உற்பத்தியின் அளவையும் அதன் விலையையும் தீர்மானித்தல் ஆகும்.

1.15

- ❖ நுகர்வோனின் கொள்வனவின் அளவு, அதிக எண்ணிக்கையை கொள்வனவு செய்யும் போது பேரம்பேசும் ஆற்றல் அதிகரிக்கும்.
- ❖ நுகர்வோனின் வியாபாரத்திற்கு அப்பண்டமானது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது.
- ❖ நுகர்வோன் மற்றொரு பண்டத்திற்கு மாறுவதற்கான செலவு. செலவு குறைவு எனில் பேரம்பேசும் ஆற்றல் அதிகம்.
- ❖ பண்டங்களின் தன்மை. அதாவது ஒரே மாதிரியான பண்டங்களை வித்தியாசமான பண்டங்களா விற்பனை செய்யப்படுகின்றது. ஒரே மாதிரியான பண்டங்களாயின் பேரம்பேசும் ஆற்றல் அதிகம்.
- ❖ பொருளின் தரம், நுகர்வோன் விலையில் அதிக கவனம் செலுத்தல்.

- ❖ நுகர்வோனின் இலாப நிலை.
- ❖ வழங்குனரை மீறிச் செல்லும் நுகர்வோனின் ஆற்றல்.
- ❖ நுகர்வோனின் விலைகள் பற்றிய அறிவு.

1.16 பெயரளவு மொத்த தேசிய உற்பத்தியானது நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் அளவிடப்படும். அதனால் இவ்அளவிடையானது விலை மாற்றங்களின் தாக்கத்தை கொண்டிருக்காது.

ஆனால் உண்மையான மொ.தே.உ. ஆனது விலை மாற்றங்களில் விளைவுகளை வெளிப்படுத்தும். இது அடியாண்டு நிலைப் பெறுமதியாகும்.

1.17

1. திறைசேரி உண்டியல்
2. வைப்புப் பத்திரங்கள்
3. வர்த்தகப் பத்திரங்கள்

1.18

- ❖ தொழிலாளருக்கான பயிற்சி குறைவு வேலையை கற்றுக் கொள்வதற்கான நேரம் குறைவு. சிறிய அளவிலான வேலைகளை கற்றுக் கொள்ளல்.
- ❖ தங்களுடைய வேலையை சுலபமாக செய்யும் முறைகளை ஆராய்தல்.
- ❖ நேரம் விரயமாகாமல் தடுத்தல்.
- ❖ தொழிற்சாலைக்குள் சுற்றித்திரிதல் குறைவடைவதால் அதிக வினைத்திறனுடன் செயலாற்றல்.
- ❖ தொழிலாளர் ஒரு கருமத்தில் தன் கவனத்தை செலுத்தல்.

1.19

| **தொழிலாளர் எண்ணிக்கை** | **மொத்த உற்பத்தி** | **எல்லை விளைவு** |
|---|---|---|
| 1 | 10 | - |
| 2 | 21 | 17 |
| 3 | 33 | 12 |
| 4 | 43 | 10 |
| 5 | 52 | 9 |

பொருளியலில் குறைந்து செல்லும் எல்லை விளைவானது, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உற்பத்திக் காரணிகள் நிலையாக இருந்தால் (குறுகிய காலத்தில்) ஆனால் ஏனைய காரணிகளது உள்ளீடு அதிகரித்தால், ஒவ்வொரு மேலதிக உள்ளீட்டிலும் இருந்து

பெறும் தொடர்ச்சியான வெளியீடு தொடர்ச்சியான வீழ்ச்சியை தொடர்ந்தும் மேற்படி தரவின் மூலம், தொழிலாளரின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, உற்பத்தி அலகுகள் அதிகரிக்கின்றது. எல்லை விளைவும் அதிகரித்து உச்ச நிலையை அடைந்த பின் அது குறைந்து செல்வதை அவதானிக்க முடியும்.

1.20 சந்தைப்படுத்தலின் ஆரம்பம் நூகர்வோனின் தேவைகளை ஆராய்ச்சி செய்வது ஆகும். ஒரு நிறுவத்தின் வெற்றியானது அதன் வாடிக்கையாளரின் தேவையை எவ்வளவு திறமாக பூர்த்தி செய்கின்றது என்பதில் தங்கியுள்ளது. ஆகவே நுகர்வோனின் தேவையை பூர்த்தி செய்யும் பண்டங்களை உற்பத்தி செய்து உரிய இடத்தில் உரிய நேரத்தில் வழங்குதல் நிறுவனத்தின் வெற்றிக்கு இன்றியமையாததாகும்.

# பகுதி 2

## வினா இல.02

1.

- ❖ கம்பனியின் செயற்பாடுகளை பரிபாலனம் செய்தல் மற்றும் அதன் முடிவுளை ஆராய்ந்து கம்பனியானது தனது குறிக்கோள்களை அடைந்துள்ளதா என ஆராய்தல்.
- ❖ கம்பனியின் தந்திரோபாய நீண்ட காலத் திட்டத்தை திட்டமிடல் அறிவித்தல்.
- ❖ கம்பனியில் கணக்கீட்டு முறையை ஒழுங்காக பேணப்படுகின்றதா எனக் கவனித்தல்.
- ❖ நிதிப் பயன்பாடு தொடர்பான ஒழுங்குகளை வடிவமைத்தல்.
- ❖ நிறுவனத்தின் நிதி மற்றும் மனித வளங்கள் நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு ஏற்றதாக உள்ளதா என ஆராய்தல்.
- ❖ நிறுவனத்திற்குள் முகாமைத்துவம் தொடர்பாக சிறந்த ஒரு கலாச்சாரத்தை உருவாக்குதல்.
- ❖ உறுதியான முகாமையாளர்களை இயக்குனர்களையும் உருவாக்கல். நிறுவனத்தில் நிகழும் மாற்றங்களை அறிவித்தல் ஆகியவற்றில் தனது தனிப்பட்ட பங்களிப்பை வழங்கல்.

2. **வரிசை அதிகாரம்**

முகாமையாளர் ஒருவர் ஊழியர் ஒருவர் மீது கொண்டிருக்கும் கிடையான சங்கிலியின் (வரிசை நிலை) கீழ் நோக்கிய அதிகாரம் ஆகும். (உ+ம்) உற்பத்தி மற்றும் விற்பனை முகாமையாளர்கள், எங்களுக்கு கொடுக்கப்பட்ட வியாபார நோக்கத்தை அடைவதற்கு வினைத்திறனுடன் செயற்பட அவர்களுக்கு வரிசை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**ஊழியர் அதிகாரம்**

முகாமையாளர் அல்லது பகுதி வரிசை நிலை அதிகாரமில்லாத மற்றைய வரிசை நிலை அல்லது பகுதி ஒன்றிற்கு சிறப்பு ஆலோசனைகளை வழங்குவதற்கு கொண்டிருக்கும் அதிகாரமாகும். இங்கு ஆலோசனை பெறும் பகுதியின் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்த முடியாது. (உ+ம்) மனிதவளப் பிரிவு, நிதியியல் பிரிவு, கொள்வனவுப் பிரிவு, முகாமைத்துவ கணக்கீட்டுப் பிரிவானது அநேகமாக ஊழியர் அதிகாரத்தை கொண்டிக்கும். அதாவது வரிசை முகாமையாளுக்கு மற்றைய ஊழியர்களுக்கும் திட்டமிடல், கட்டுப்படுத்தல், நிலை நிர்ணயம் தொடர்பான சேவைகளை வழங்கல்.

3. முகாமையாளர்கள் முழு நிறுவனத்திற்குமான தொழிற்பாட்டு அதிகாரத்தை கொண்டிருப்பர். ஆகவே இவர்கள் பிரிவிற்குள் குறித்த ஒரு விடயமானது காணப்படுமானால் இவர்கள் நடவடிக்கையை எடுப்பதற்கும் ஏனைய பகுதியை கட்டாயப்படுத்துவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பது. (உ+ம்) நிதியியல் கணக்காளர் ஏனைய பகுதிகளிலிருந்து நிதி அறிக்கைகளை வேண்டுதல்.

## வினால இல.03

1.

- பணத்தின் பெறுமதியின் ஸ்திரமின்மை காரணமாக வியாபார திட்டமிடல் மிகவும் கடினமானதாகவும் நிச்சயமற்றதாகவும் காணப்படுகின்றது. இதனால் புதிய முதலீடுகளின் தாக்கம் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் பணவீக்கமானது இலாபங்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். பொருட்களின் விலை அதிகரிப்பால் நுகர்வோனின் செலவு செய்யும் ஆற்றல் குறைவடையும்.

- விலை மாற்றத்தினால் மேலதிகமான செலவு ஏற்படுகின்றது. இதனால் நுகர்வோனின் செலவு செய்யும் ஆற்றல் நிலையற்றது. (உ+ம்) பண வீக்கத்திற்கேற்ப கூலிகள் மாறாவிட்டால் நுகர்வோனின் கொள்வனவு திறன் குறையும். அவர் முன்னையதை விட குறைவான அளவிலே கொள்வனவு செய்வான்.

- பணவீக்கமானது செல்வத்தையும் வருமானத்தையும் மீள் பங்கீடு செய்கின்றது. பண வீக்கத்தினால் நடைமுறைச் சொத்திலும் நடைமுறை கொடுப்பனவுகளிலும் மாற்றம் ஏற்படும். இதனால் கடன் கொடுனர் தமது கடனின் பெறுமதி குறைவதையும், கடன் பெற்றவர் குறைவான பெறுமதியை மீள் செலுத்தும் நிலை காணப்படும்.

- சென்மதி நிலுவையில் எதிர்மறையான தாக்கம் பணவீக்கத்தால் ஒப்பீட்டு ரீதியில் இறக்குமதியின் விலை மலிவானதாக இருக்கும். இதனால் நிலுவை பாதிக்கப்பட்டு வர்த்தக மாற்று வீதமும் பாதிக்கப்படும்.

2.

- அரசாங்கத்தின் செலவீனங்கள் குறைக்கப்படல்
- கொள்வனவு ஆற்றலைக் குறைக்க வரிகளை அதிகரித்தல்
- வட்டி வீதங்களை அதிகரித்தல்

## <u>வினா இல.04</u>

1. **<u>ஏற்றுதல்</u>**

உற்பத்தி முகாமைத்துவ பகுதியானது, ஒவ்வொரு உற்பத்தி நடவடிக்கைக்கும் ஒரு கால அட்டவணையை அதாவது எப்போது ஆரம்பித்து எப்போது முடிக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்றுதல் என்பது ஒரு செய்பாட்டு அலகிற்காக ஒதுக்கப்பட்ட வேலையின் அலகாகும். திட்டமிடும் நபரினால் எந்த வகையில் உற்பத்திக்குட்படுத்த வேண்டும் எந்த அளவில் உட்படுத்தப்பட வேண்டுமென்று தீர்மானம் எடுக்கப்படும்.

**<u>வரிசைப்படுத்தல்</u>**

முடிவுகள் வெவ்வேறு வேலைகள் அல்லது வேறுபட்ட கட்டளைகளை நிறைவேற்றும் போது ஒழுங்குபடுத்தும் போது எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். வரிசைப்படுத்தலானது பின்வரும் யாதாயினும் ஒன்றின் அடிப்படையில் காணப்படும் :-

- வாடிக்கையாளர் முன்னுரிமை
- கொடுக்கப்பட வேண்டிய திகதி
- இறுதியில் வந்தது முதலில் வெளியே - LIFO
- முதலில் வந்தது முதலில் வெளியே - FIFO
- முதல் தடவை நீண்ட செயற்பாடு
- முதல் தடைவ குறுகிய செயற்பாடு

**<u>அட்டவணைப்படுத்தல்</u>**

வேலைகள் ஒழுங்குபடுத்தப்படுவதுடன் வேலைகள் எந்நேரத்தில் தொடங்கப்பட வேண்டும் எனவும், அவை எந்நேரத்தில் கொண்டுவரப்படல் வேண்டும் என்பது தொடர்பான ஒரு விரிவான கால அட்டவணை தயாரித்தல். அட்டவணைப்படுத்தல் மூலம் அவசியமான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விரிவான திட்டமிடலின் போது வாடிக்கையாளரது தேவைகள் பூர்த்தி செய்யப்பட முடியும் என்பதை உறுதி செய்வதற்கு முறையான அட்டவணைப்படுத்தல் அவசியம்.

**<u>கண்காணித்தலும் கட்டுப்படுத்தலும்</u>**

ஏற்ற வரிசை முறை மற்றும் வேலைகளை அட்டவணைப்படுத்தல் ஆகியன **<u>திட்டமிட்ட படி இடம் பெறுகின்றதா</u>** என்பதை கண்காணிப்பது அவசியமாகும். காட்டப்பட்ட திட்டத்திலிருந்து விலகல் காணப்பட்டால் அதனை மீண்டும் திட்டமிடுவதற்கு சரியான அளவீடுகள் தேவைப்படலாம்.

‘‘தூண்டல் கட்டுப்பாடு’’ மற்றும் ‘‘இழுவைக் கட்டுப்பாடு’’ எனும் பதங்கள் வேலைப் பாய்ச்சல் முகாமையின் போது எடுக்கப்படும் கட்டுப்பாடுகளைக் குறிக்கும்.

தூண்டல் கட்டுப்பாடு உற்பத்தி மற்றும் இருப்பு மட்டம் என்பவற்றை கண்காணிப்பதோடு ஒவ்வொரு செயற்பாட்டுப்படி முறைகளினூடாக அடுத்த கட்டத்தைப் பெறுவதற்கு தயாராக உள்ளது.

இழுவைக் கட்டுப்பாடு என்பது கவனம் தேவைப்படும் போது முன்னைய செயல்முறை யிலிருந்து வழங்கப்படும் பணி, செயன்முறையின் ஒவ்வொரு நிலையிலும் உள்ளது. வேலை தேவைப்படும் வரை முந்தைய செயற்பாடுகளிலிருந்து வழங்கப்படுவதில்லை. இழுவைக் கட்டுப்பாட்டுடன் குறைவான இருப்பு முறையினுள் காணப்படும்.

2. **<u>தொழினுட்பச் சிக்கனங்கள்</u>**

தொழில்நுட்பச் சிக்கனங்கள் உற்பத்திச் செயன்முறைகளினால் எழுகின்றது. ஏனெனில் கைத்தொழிலின் அளவில் அல்லது கருவிகளின் விலையின் தங்கியிருக்கின்றது. இங்கு முக்கியமாக கருத வேண்டிய விடயமானது நேரில் செலவீனங்கள் அதிகளவு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் போது AFC குறைவடையும்.

**<u>நிறுவனச் சிக்கனம்</u>**

வணிகத்தை நடத்திச் செல்வதற்கான செலவுகள் குறைக்கப்படுவதினால் ஏற்படுகின்றது.

நிர்வாகம் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் மற்றும் சந்தைப்படுத்தல் என்பன தனிநபர் செயற்பாட்டு அமைவிடங்களில் செலவுச் சுமைகளைக் குறைக்கும்.

முகாமைத்துவத்தின் அதிக திறன் பயன்பாடு, முகாமைத்துவ எண்ணிக்கை மற்றும் மேற்பார்வை ஊழியர்கள் வெளியீட்டை அதேயளவு வீதத்தில் அதிகரிக்க முடியாது.

**<u>நிதிச் சிக்கனங்கள்</u>**

பெரும்பாலான நிறுவனங்களைப் பொறுத்த வரையில் வங்கிக் கூறுகளில் வட்டிக் கொடுப்பனவானது பெருஞ்செலவாக காணப்படுகின்றது. இச்சிக்கனமானது பெரிய நிறுவனங்களுக்கு அதிகப்படியாக வழங்கப்படும். பெரிய நிறுவனங்களின் சொத்து மதிப்பு அதிகமாக காணப்படுவதால் வங்கிகளிடம் நம்பகத்தன்மை அதிகமாக உள்ளது. பாரிய நிறுவனங்கள் தங்கள் நிதித் தேவையை பவூர்த்தி செய்ய பங்கு வழங்கல் முறை மூலமும் பயன்படுத்தலாம்.

சிறந்த சொத்து/ புரள்வு விகிதம் - பாரிய நிறுவனங்கள் தொழினுட்பச் சிக்கனம் காரணமாக அவர்களது விற்பனை வருமானம் சார்பளவில் குறைவான சொத்துக்களைக் கொண்டிருக்கலாம். ஆவவே குறைந்தளவாக கடன் தேவையால் புரள்வை விட குறைந்த வட்டி வீதத்தை அவை செலுத்த வேண்டிய தேவையிருந்தது.

**<u>வர்த்தக அல்லது சந்தைப்படுத்தல் சிக்கனங்கள்</u>**

இச்சிக்கனமானது மூலப்பொருட்களை கொள்வனவு செய்யும் போதும் பண்டங்களை விற்பனை செய்யும் போதும் ஏற்படுகின்றது.

(உ+ம்) :

- பாரிய கொள்வனவுகளின் போது கழிவு பெறப்படல்
- பாரிய அளவு விற்பனை விநியோக செலவுகள் மற்றும் விளம்பரச் செலவுகளிலும் சிக்கனத்தை ஏற்படுத்தல்.

3. அடிப்படை மூலப்பொருட்கள் வெற்றிப்படி முறைகளினூடாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இறுதி வெளியீடு ஒரு தனிப் பொருளாகவோ அல்லது வேறுபட்ட உற்பத்திகளாக இருக்கலாம்.

இங்கு உற்பத்தி செயற்பாடானது எவ்வித தடையுமின்றி நடைபெறும். இவை 24 மணித்தியாலமும் 7 நாட்களும் தொடர்ந்து நடைபெறும்.

இது போன்ற செயன்முறையை ஆரம்பிப்பதற்கான மூலதன செலவு அதிகமாக காணப்படுவதால், முகாமைத்துவமானது அதனை நிறுத்துவதினால் ஏற்படும் நட்டத்தைப் பற்றி அதிக கவனம் செலுத்துகின்றது.

(உ+ம்):- எண்ணெய் சுத்திகரிப்பு, சவர்க்காரம், வர்ணம், ஆடை, குளிர்பானம் தயாரிப்பு.

**<u>அனுகூலங்கள்</u>**

- அதிக உற்பத்தி அலகுகள் குறைந்த நேரத்தில் உற்பத்தி செய்யப்படும். அநாவசிய நிறுத்தல்கள், மீள் ஆரம்பிப்புக்கள் தவிர்க்கவும். அலகு உற்பத்தி செலவு குறைவு வலு சக்தி வீணாக்கப்படமாட்டாது.
- உயர்தர உற்பத்தி அலகுகள் மனித தவறுகள் குறைவு
- நேரம் வீணாக்கப்பட மாட்டாமை
- நிறுத்தப்படாத உற்பத்திச் செயற்பாட்டினால் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அளவு வெளியீடுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

## வினா இல. 5

1. விளைவுத் திறனான ஒரு தலைவர் பின்வரும் காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ❖ மற்றவர்கள் செல்லவேண்டிய திசையை தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும்.
   - ❖ தன்னில் அதிகளவு நேரிய சிந்தனைகளை கொண்டிருக்க வேண்டும்.
   - ❖ மற்றவர்களில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துபவராக இருக்க வேண்டும்.
   - ❖ நோக்கங்களை அடைவதற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

2. சுகாதார அமைச்சின் செயலாளர் உடனடியாக ஒரு தகுந்த ஒரு நபரை இந்த பதவிக்கு இரண்டு வாரங்களில் தெரிவு செய்தல் வேண்டும். இக்கால எல்லை குறித்த வேலையை செய்ய மிகவும் குறுகியது.

   இந்த சுகாதார வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இவ்வேலை உடனடியாக நிறைவு செய்யப்பட வேண்டும். இவ்வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படுவதும் வெற்றிகரமாக நடைபெறவும் தகுந்த ஒரு நபரை தெரிந்தெடுப்பது அவசியமாகும்.

   எனவே சுகாதார அமைச்சின் செயலாளர் இந்தப் பிரச்சினையை வினைத் திறனுடனும் சிக்கலின்றியும் அணுக வேண்டியது அவசியமாகும்.

3. 
   - ❖ முடிவெடுக்கும் மற்றும் சிக்கல்களை தீர்க்கும் திறன்.
   - ❖ மற்றவர்கள் செல்ல வேண்டிய திசையை நிர்ணயித்தல்.
   - ❖ சக ஊழியர்களுடன் மற்றவர்களுடனும் இலகுவாக பழகுதல்.
   - ❖ முகாமைத்துவ பண்புகள்
   - ❖ தீர்மானம் எடுக்கும் ஆற்றல்
   - ❖ சுகாதார வேலைத் திட்டத்தைப் பற்றிய முழு அறிவு.

## வினா இல.06

1. (1) படம் சரியாக வரையப்பட்டிருப்பின் புள்ளிகள் வழங்கப்படும்.

   (11) ஆரம்ப சமநிலை விலை

$$900 + (-6)p = -100 + 4p$$

P = ரூபா 100

   (111) சமநிலை கணியம் = 300,000 kgs

2. கேள்வி வளையி விலை குறிக்கப்பட்ட அச்சை ரூபா 150 இடைவெட்டுகின்றது

நுகர்வோர் மிகையி = (ரூ. 150 - ரூ. 100) x $\frac{300,000}{2}$

= ரூ. 7,500,000

3.

| விலை (ரூபா) | மொத்த நிரம்பல் mt ('000) | மொத்த புதிய நிரம்பல் mt ('000) |
|---|---|---|
| 70 | 180 | 210 |
| 90 | 260 | 290 |
| 110 | 340 | 370 |
| 130 | 420 | 450 |
| 150 | 500 | 530 |

புதிய நிரம்பல் வளையி வரையப்பட வேண்டும்.

4. (i) புதிய நிரம்பல் சமன்பாடு ⇒ Qs(11) = -70 + 4p

புதிய சமநிலை விலை ⇒ Qs(11) = Q(d)

-70 + 4p = 900 + (-6)p

= ரூ. 97

   (ii) விலை வீழ்ச்சி = 100 – 97 = ரூபா 3

5. புதிய வரிவிதிப்பின் பின்னர் சமநிலைச் சந்தை விலை = 100 -1 = ரூபா 99

வரியின் அளவு = 99 – 97 = ரூபா 2

6. தூயநிறை போட்டி

**<u>பண்புகள்</u>**

- சந்தையில் பெரிய எண்ணிக்கையான வாங்குபவர்களும் விற்பவர்களும் காணப்படுவர்.
- விலை ஏற்படுவராக எல்லா நிறுவனங்களும் காணப்படும்.
- பவூரணத் தகவல்
- பண்டங்கள் ஓரினத் தன்மையானது
- பிறவேறு தடை காணப்படமாட்டாது

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ஞ அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

---

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

---